
மௌனத்தின்
சக்தி
- வர்ஷா



1. இருப்பது ஒரு வாழ்க்கை. அதை உன் எண்ணம் போல வாழு. பிறர் சொல்வதைக் கேட்டு மனம் உடைந்து போகாதே.

2. எந்த ஒரு செயலையும் உன்னால் முடிந்ததை செய். தவறானாலும் சரி ஆனால் செய்ய முயற்சிக்காமல் இருக்காதே. தவறுகள் தான் உன்னை சரியானப் பாதையில் நகர்த்திச் செல்லும்.

3. உன் எண்ணம் போல வாழு. எல்லாருக்கும் பிடித்த மாதிரி யாராலும் வாழ முடியாது.

4. வாழ்க்கை என்பது கரடுமுரடான பாதை போல. பயணம் எளிதாய் அமைவதும் கடினமாய் அமைவதும் நம் மனதில் தான் உள்ளது. எப்போது பயணம் முடியும் யார் செல்வார்கள் என்று யாருக்கும் தெரியாது. இருக்கும் வரை அடுத்தவரைக் குறை சொல்லாமல் மனதில் வஞ்சம் பொறாமை இல்லாமல் வாழுங்கள்.

5. உன் வாழ்க்கையில் எதுவும் சரியாக அமையவில்லை என்று கவலைப்படாதே. எப்போது வேண்டுமானாலும் உன் வாழ்க்கை மாறும். அதுவரை நம்பிக்கையோடுக் காத்திரு.

6. பணம், பதவியை விட ஆரோக்கியம் மிகவும் முக்கியமானது .

7. மனிதனின் அழிவிற்கான ஆயுதம் பிறர் மீது நாம் வைக்கும் அன்பு. அளவோடு பழகுவோம் மகிழ்வோடு வாழ்வோம். இல்லையெனில் கவலை மட்டுமே மிஞ்சும்.

8. உளி தான் கல்லை சிற்பமாக்கும். அது போல கஷ்டங்கள் தான் உன்னை வலிமையாக்கும்.

9. எந்த உறவும் உண்மையான அன்பின் முன் தோற்கும். காலம் தான் மற்றவரின் உண்மையான ரூபத்தை வெளிச்சமாக்கும்.

10. வாழும் ஒவ்வொரு நிமிடமும் அனுபவித்து வாழு. ஏனென்றால் அடுத்த நொடி என்ன நிகழும் என்று யாருக்கும் தெரியாது.

11. எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அது பெரியதாக தெரியாமல் கடந்து செல்ல உதவும் உறவு நட்பு மட்டுமே.

12. எத்தனை உறவுகள் நம் வாழ்வில் இருந்தாலும் அவை பெற்றோரின் அரவணைப்பிற்கு ஈடாகாது.

13. வாழ்க்கை என்பது ஒரு விளையாட்டு. அதில் எப்படி விளையாடி வெற்றி பெறலாம் என்று எண்ணுங்கள். தோல்வி நினைத்து கலங்காதீர்கள். ஏனென்றால் தோல்வி தான் வெற்றியின் முதல் படி.

14. எவ்வாறு எதிர்ப்பார்த்தாலும் எவ்வளவு விலைக் கொடுத்தாலும் திரும்பி கிடைக்காதது குழந்தை பருவம். வாழும் வாழ்க்கையைக் குழந்தையைப் போல ஆனந்தமாய் அனுபவித்து வாழுங்கள்.

15. உன்னைச் சுற்றி அனைத்தும் சோதனைகளாக இருக்கிறது என்றால் கடவுள் உன்னை வலிமையைத் தாங்கும் சக்தியைக் கொடுக்கிறார் என்று அர்த்தம் தானே தவிர உன்னை முடக்கி சரிப்பதற்கு அல்ல.

16. இறைவன் எல்லாருக்குள்ளும் தனித்திறமைகளைப் படைத்தே அனுப்புகிறார். எனவே நீ மற்றவர்கள் போல இல்லை என நினைத்து உன்னைத் தாழ்த்திக் கொள்ளாதே.

17. எப்போது நம் வாழ்க்கை மாறும் என்று யாருக்கும் தெரியாது. காலம் அனைத்தையும் மாற்றும். அதுவரை மன உறுதியோடு இரு.

18. நம் வாழ்வில் ஒருவர் நம்மை விட்டு பிரிந்து செல்கிறார் என்றால் அவர்களை விட ஓர் அன்பான அழகிய உறவு உன் வாழ்க்கையில் கிடைக்கப் போகிறது என்று அர்த்தம். எனவேப் பிரிவை நினைத்து வருந்தாதே.

19. நம் வாழ்க்கையில் யார் உண்மையானவர், போலியானவர் என்று நமக்கு கஷ்டம் ஏற்படும் போது தெரியும். கஷ்டங்கள் தான் தீமையான மனிதர்களை அடையாளம் காட்டும்.

20. பிரச்சனைகள் வரும்போது கடவுள் மீது பாரத்தைப் போட்டு விட்டு உன் வேலையை செய். எதற்கும் கலங்காதே.

21. நாம் எதிர்பாராமல் நிகழும் நிகழ்வுகளே வாழ்க்கை. என்ன நடந்தாலும் பார்த்துக் கொள்ளலாம் என்று நம்பிக்கையோடு முன் நோக்கி செல்.

22. சேர்ந்து இருந்துப் பிறருக்குப் பாரமாக இருப்பதை விட தனிமையே மேல்.

23. பிரச்சனைகள் வரும்போது மனமுடைந்து முடங்கி விடாதே. கடவுள் கருணை உன் மீது பட்டால் ஒரு நொடியில் உன் வாழ்க்கை மாற்றும்.

24. அன்பை விட வலிமையான ஆயுதம் இந்த உலகத்தில் இல்லை

25. உன்னை கேவலமாய் எண்ணுபவர் முன் நீ எதிர்த்துப் பேசுவதை விட உன் தகுதியே உயர்த்தி நிற்பதே சிறந்த தண்டனை.

26. இருக்கும் வாழ்வை உனக்குப் பிடித்ததுப் போல வாழு. மகிழ்ச்சியாய் இரு.

27. எந்த நிலை வந்தாலும் உன் நல்ல குணத்தை இழந்து விடாதே. அதுவே உன்னை வெற்றிப் பாதையில் கூட்டிச் செல்லும்.

28. யார் துணையும் இல்லாமல் தனியாகப் போராடி உன்னால் வாழ முடிந்தால் நீயே சிறந்த வெற்றியாளர்.

29. கஷ்டத்தில் உண்மையான அன்பு நிறைந்த மனிதர் நமக்கு துணையாகக் கிடைத்தால் அந்த வாழ்க்கை வரமே.

30. உன்னைக் கஷ்டப்படுத்தியவர்கள் சந்தோஷமாய் வாழும் போது நீ மட்டும் ஏன் வேதனையில் வாடுகிறாய். உன் நல்ல குணம் எல்லாவற்றையும் கடந்து செல்லும். கவலைக் கொள்ளாதே.

31. ஒவ்வொரு நிமிடத்தையும் ரசித்து மகிழ்ச்சியாக வாழு. வாழ்க்கையே உன்னைப் பார்த்து பொறாமைப்படும் அளவிற்கு.

32. பலனை எதிர்பாராமல் உன் வேலையை செய்துக் கொண்டே இரு. வாழ்க்கை நீ எண்ணாத உயரத்தில் உன்னைக் கொண்டு சேர்க்கும்.

33. எவ்வளவு கஷ்டம் இருந்தாலும் அதை பற்றிச் சிந்திக்காமல் உனக்குப் பிடித்ததைச் செய்து வாழ்க்கையை நகர்த்திக் கொண்டேச் செல் ஒரே இடத்தில் நின்று விடாமல்.

34. குறைக் கூறுபவர்கள் கூறிக் கொண்டே தான் இருப்பார்கள். அதை உதறி விட்டு உங்கள் வாழ்க்கையின் இலக்கை நோக்கி செல்லுங்கள்.

35. வாழ்க்கையில் எதிர்பாராமல் கிடைக்கும் அன்பு மிகவும் அரிதானது அதை அழகாகப் பாதுகாத்து வைத்துக் கொள்ளுங்கள்.

36. வாழ்வில் எந்த நிலை வந்தாலும், எல்லாம் இழந்த பிறகும் மனம் தளர விடாமல் இருந்தாய் என்றால் எல்லாவற்றையும் கடந்து விடலாம்.

37. உங்களிடம் உண்மையாய் இருப்பவருக்கு மட்டும் நீங்கள் உண்மையான உங்களை வெளிப்படுத்துங்கள். எல்லாரிடமும் வெளிப்படுத்தினால் நீங்கள் தான் பெரிய ஏமாளி.

38. ஓர் உறவுப் புதிதாக உருவாவதும் ஓர் உறவுப் பிரிதலும் நிறைந்ததுத் தான் வாழ்க்கை. எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு கடந்துச் செல்ல வேண்டும்.

39. கஷ்டம் வந்ததும் வாழ்வே முடிந்து விட்டது என்று எண்ணாதீர்கள். அதற்கு பின் தான் நீங்கள் எதிர்பாராத அழகிய வாழ்க்கை காத்திருக்கும்.

40. நல்ல மனிதர்கள் யார் என்றுப் பார்த்து பழகு. இல்லையெனில் உன் வாழ்வை இழக்க நேரிடும்.

41. நம் குறைகளையும் நேசித்து நம்மை விட்டு விலகாமல் இருக்கும் உறவு வாழ்வில் கிடைத்தால் அந்த வாழ்க்கை வரமே.

42. மற்றவர்களைப் பற்றித் தெரியாமல் உங்களைப் பற்றியும் உங்களின் எண்ணங்களையும் வெளிப்படுத்தாதீர்கள்.

43. பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு. எல்லா இடங்களிலும் எல்லா நேரங்களிலும் பொறுத்துப் போகாதே. உன் மதிப்பை குறைத்துக் கொள்ளாதே.

44. நேரமும் காலமும் எப்போது வேண்டுமானாலும் மாறும். உன் வாழ்க்கையும் மாறும் எதையும் நினைத்து கவலைக் கொள்ளாதே.

45. எல்லாருக்கும் குறைகள் உண்டு. குறைகளைப் பார்க்காமல் நல்ல மனதை நேசியுங்கள். வாழ்க்கை அழகாய் அமையும்.

46. எந்த நிலையிலும் அன்பைத் தவிர எதற்கும் கட்டுப்படாதே.

47. அன்பான வார்த்தையும் அரவணைப்பும் தான் மனிதரின் வாழ்வை மேம்படுத்தும்.

48. பிறருக்கு உதவும் குணமே உன்னை வாழ்வில் உயர்த்தும்.

49. என்ன நடந்தாலும் சிரித்துக் கொண்டே கடந்து செல். உன் கவலைகள் அனைத்தும் மறைந்துவிடும்.

50. பிடித்ததைச் செய்து மகிழ்ச்சியாக வாழு. யாருக்காகவும் பிடித்ததை இழந்து விடாதே.

51. இப்போது உன்னிடம் எதுவும் இல்லாமல் இருக்கலாம் ஆனால் எதிர்காலம் உன்னிடம் அனைத்தையும் கொண்டு வந்துச் சேர்க்கும். எனவேத் துவண்டு விடாதே.

52. ஆசை எனும் போதையில் மூழ்கி வாழ்வை அழித்துக் கொள்ளாதே. உனதுத் தேவையில் மட்டும் கவனம் செலுத்து.

53. நல்லதே நடக்கும் என்று நம்பிக்கையோடு செயல்படு. எல்லாம் நன்மையாகவே நடக்கும். நடக்குமா என்ற சந்தேகம் அடையாதே.

54. யார் உன்னைப் பற்றி என்னச் சொன்னாலும் பரவாயில்லை. கவலைப் படாமல் உன் வேலையைச் செய்துக் கடந்துக் கொண்டே இரு. உனக்கானச் சந்தோஷமான வாழ்க்கை காத்திருக்கிறது.

55. எல்லாவற்றையும் மறந்து விட்டு ஒவ்வொரு நாளும் புதிதாகப் பிறந்ததுப் போல நினைத்து சந்தோஷமாய் வாழு.

56. வடிவங்கள் என்பது எப்படி இருக்கும் என்று முதலில் தெரியாது. உளியால் செதுக்கச் செதுக்க வடிவம் பெறும். அதுப் போல உன் உழைப்பைப் பொருத்து உன் வெற்றியின் வடிவம் மற்றும் உன் வடிவம் மற்றவரின் மனதில் நிற்பதும்.

57. படிப்பு என்பது வேறு திறமை என்பது வேறு. தகுதி, திறமை இருந்தால் போதும் உலகம் உன் வசமாகும். முடியாது என்று எண்ணாதே. பலப் பேர் உன்னால் முடியாது என்றுச் சொன்ன வாழ்க்கையைத் தான் இன்று நீ வாழ்ந்துக் கொண்டிருக்கிறாய். இனியும் உன்னால் முடியும். எதற்காகவும் கலங்காதே. உனக்கான நேரம் வரும் வரைக் காத்திரு.

58. பெண் என்பவள் பிறருக்குத் தேவை வரும் போது மட்டும் பயன்படுத்திக் கொள்ளும் பொருள் அல்ல. அவள் மாபெரும் சக்தி. அவளுக்கு ஈடாக எவற்றாலும் முடியாது. அவளை உதாசீனம் செய்தால் அழிவு தான் நேரும். ஆணுக்கு சேவை செய்யப் படைக்கப்பட்டவள் பெண் அல்ல. உலகை அன்பால் ஆட்சி செய்ய பிறந்தவள் பெண்.

59. உழைத்துக் கொண்டே இரு உனக்கான சரியான ஊதியம் விரைவில் கிடைக்கும் நம்பிக்கையை விடாதே.

60. எதிர்பாராதது உன் வாழ்க்கையில் நடந்தாலும் கவலைப்படாமல் அடுத்து என்ன செய்வது என்று விடாமுயற்சியோடு முன் நோக்கி செல்லுங்கள். நல்லதே நடக்கும் என்று நம்பிக்கையோடு செயல்படு.

61. பிறர் நலத்திற்காக வாழ்ந்து உன் நலத்தைப் பார்க்காமல் உன் வாழ்வைத் தொலைத்து விடாதே.

62. உன்னுடைய வாழ்க்கை மாறும் நேரம் வந்துக் கொண்டிருக்கிறது. இனிப் பிறக்கும் வருடம் உனக்கானது. அதைப் பயன்படுத்திக் கொள்.

63. உனக்கானப் புதிய அத்யாயத்தை எழுதத் தயாராக இரு. உன் வாழ்க்கை உன் கையில்.

64. துன்பங்கள் துரோகங்கள் உன்னை சூழ்ந்து கீழே தள்ளினாலும் விழுந்து விடாமல் நம்பிக்கையோடு முன் நகர்ந்துக் கொண்டே இரு. உனக்கு வீழ்ச்சி என்பதே இல்லை. உன் இலக்கை அடைய முயற்சி செய்துக் கொண்டே இரு.

65. மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பாடங்களைக் கற்றுக் கொடுக்கிறார்கள் என்று நினைத்து கடந்து விடு. நினைத்துக் கொண்டே இருந்தால் கவலைத் தான் மிஞ்சும்.

66. இறைவன் எப்போதும் உன் அமைதியில் வாழ்கிறார் உன் அன்பான குணத்தை நேசிக்கிறார். எனவே நீ மற்றவர்கள் உன்னை புரிந்துக் கொள்ளவில்லை நேசிக்கவில்லை தனியாக இருக்கிறாய் என்றுக் கலங்காதே.

67. தவறுச் செய்வதே மனித இயல்பு. குறைக் கூறுவதுத் தான் மனிதரின் குணம்.நிறைக் குறைச் சேர்ந்ததே மனித வாழ்க்கை. மற்றவர்கள் உன்னை தவறானவள் என்று கூறுவதால் நீ தவறானவள் ஆகமாட்டாய். உன் வேலையைச் செய்துக் கடந்துக் கொண்டே இரு. உனக்கு உன்னைப் பற்றித் தெரிந்தால் போதும்.

68. பிறரின் சந்தோஷத்தில் மட்டும் துணையாய் இல்லாமல் கஷ்டத்திலும் பங்குக் கொண்டு வாழுங்கள். உன்னிடம் மற்றவர்கள் எதிர்பார்ப்பது அன்பான வார்த்தையும் அரவணைப்பும் தான்.

69. நன்றாகப் படித்து நல்ல வேலையில் இருப்பது மட்டும் பெற்றோருக்கு முக்கியமல்ல. எந்த நிலை வந்தாலும் விட்டுக்கொடுக்காமல் அவர்களது கடன் சுமையை குறைக்க உதவுவதே மிக முக்கியமானது. ஏனென்றால் உன் சிறுவயதில் உன்னை சுமையாக நினைத்திருந்தால் இந்த வாழ்க்கை உனக்கில்லை.

70. முடியாது என்று நீ எதைவிட்டு விலகுகிறாயோ அதுதான் உன் வாழ்வில் துரத்திக்கொண்டே வரும். ஒரு முறை முயற்சித்துப் பார் உன் வாழ்வை அழகாக்கும்.

71. உன்னை நிராகரித்துக் கொண்டே இருப்பதால் நீ அதற்குத் தகுதியான நபர் இல்லை என்று அர்த்தமல்ல. உனக்கானது அது இல்லை. உனக்கு அதை விட மிகப் பெரிய பொக்கிஷம் கடவுள் வைத்திருக்கிறார். மனம் தளராமல் முயற்சித்துக் கொண்டே இரு. உனக்கானது உன்னை வந்துச் சேரும்.

72. எவ்வளவுப் பிடிவாதமாக விடாமுயற்சியோடு ஒன்றைப் பெற முயற்சிக்கிறாயோ அதைப் பொருத்துத் தான் அந்தப் பொருள் உன்னை வந்துச் சேரும்.

73. உன் இறந்தக் காலம் எப்படி வேண்டுமானாலும் இருந்திருக்கலாம். இறைவன் நினைத்தால் ஒரு நொடியில் உன் வாழ்க்கை மாற்றுவார். உன்னால் முடிந்த அன்பைப் பிறருக்கு கொடு. உனக்குப் பிறர் தரவில்லை என்றாலும் நீ பிறரை அன்புச் செய். உனக்கானதை இறைவன் கொடுப்பார்.

74. நம் வாழ்வில் உறவுகள் அமைவதுக் கடினம். ஆனால் உறவுகள் கிடைத்தால் அதை நாம் எளிதில் தொலைத்து விடுகிறோம். தொலைத்து விட்டப்பின் தான் அறிகிறோம் உறவின் அருமையை.

75. எத்தனை வருஷம் வாழ்ந்தோம் என்பது முக்கியமல்ல. நாம் எப்படிப் பிறரை நடத்துகிறோம் நாம் எப்படி வாழ்கிறோம் என்பது தான் முக்கியம். அதுத் தான் நம்முடைய அடையாளம்.

76. வண்ணத்துப்பூச்சிப் போல எப்போதும் சந்தோஷமாய் பறந்திடு யாருக்கும் கைக்கு எட்டாதத் தூரத்தில். உன்னைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ள உன்னால் மட்டும் தான் முடியும்.

77. நாம் பணம், பதவி இல்லாமல் வாழலாம். ஆனால் நல்ல உறவு, நிம்மதி, சந்தோஷம் இல்லாமல் வாழ முடியாது. எனவே நல்ல உறவையும், நல்லப் பெயரையும் சம்பாதியுங்கள்.

78. ஒன்றை முயற்சிச் செய்துத் தோல்வி அடைவதை விட முயற்சிச் செய்யலாமா என்று மனதில் எண்ணிக் கொண்டு முயற்சிக்காமல் இருப்பதே மிகப் பெரிய தோல்வியாகும்.

79. வாழ்க்கை உனக்கு எவ்வளவு பாரமாக இருந்தாலும் முடிந்தவரை உன் முயற்சியைக் கொடு. ஆனால் முயற்சியை கைவிடாதே. உனக்கு எவ்வளவு சோதனைகள் வந்தாலும் இறைவன் நீக்கிவிடுவார். எதற்கும் கலங்காதே.

80. யாருக்காகவும் உனக்குப் பிடித்ததை செய்யாமல் இருக்காதே. உன்னால் மட்டும் தான் உன் மனதை திருப்திப் படுத்த முடியும்.

81. காலம், நேரம், வயது அனைத்தும் சென்று விடும். ஆனால் நமக்குப் பிடித்த உறவுகள் என்றும் செல்லாது. என்றும் தொடரும் அன்புடன்.

82. நீ எப்போதெல்லாம் நினைக்கிறாயோ அப்போதெல்லாம் நான் உன் அருகில் இருப்பேன். கனவாக அல்ல. உன் மனதில் பதிந்து இருக்கும் நினைவாக.

83. கஷ்டங்கள் பல வந்தாலும் உன் எண்ணங்களில் தெளிவாக இருந்து முயற்சியை கைவிடாமல் இரு. அதுவே உன்னை வெற்றிப் பாதையில் கூட்டிச் செல்லும்.

84. இவ்வுலகில் பிறந்த அனைவருமே அழகு தான். ஒருவர் குணத்தில் சிறந்தவராக இருப்பர், ஒருவர் அறிவில் சிறந்தவராக இருப்பர். அழகு என்பது நிலையானது இல்லை. கருப்பு, வெள்ளை என்பது நிறம் மட்டுமே. எனவே அதைப் பற்றி சிந்திக்கக் கூடாது.

85. தினமும் ஒருவரைப் பார்ப்பதும் பேசுவது மட்டும் அன்பு அல்ல. எவ்வளவுத் தொலைவில் இருந்தாலும் அவரை நினைப்பதும் அவரை சரியாக புரிந்துக் கொண்டு உறுதுணையாக நடந்துக் கொள்வதே உண்மையான அன்பு.

86. காதல் என்பது காற்றைப் போன்றது. அது யாரைத் தீண்டும் என்று யாருக்கும் தெரியாது. அதேத் தீண்டியப் பின் யாருக்கும் தெரியாமல் போகாது.

87. நம் வாழ்க்கையில் பணம், பதவி, இளமை இம்மூன்றும் போனால் திரும்பி வராது. இவை இருக்கு என்று திமிராக ஆடினால் வாழ்க்கை நிலையானதாக இருக்காது. உயர்வு, தாழ்வு இவ்விரண்டுமே மனிதர்களுக்கு உண்டு. அதனால் அன்பைப் பகிர்ந்து மகிழ்ச்சியோடு வாழுங்கள்.

88. மனிதர்கள் வேண்டாமென்று விலகியே இருந்தேன். வாழ்க்கை எனக்கு மனிதர்களின் முக்கியத்துவத்தையும் அவர்களின் மனநிலையும் இப்போது தான் தெரியப்படுத்திக் கொண்டிருக்கிறது.

89. பலத் தடைகள் உன்னைத் தேடி வரும் உன் செயலைத் தடுப்பதற்கு, உன் எண்ணங்களைச் சிதைப்பதற்கு. என்ன நிகழ்ந்தாலும் முயற்சியை விடாமல் இருந்தால் தடைகள் அனைத்தும் தானாய் விலகி உனக்கான வழி பிறக்கும்.

90. பிறரிடம் நீ பேசினால் நீ யாரென்று அறிந்துக் கொள்வார். பிறர் பேசுவதைக் கேட்டால் பிறரை நீ அறிவாய். உன்னை நீ வாழ்வில் முன்னேற்றிக் கொண்டுச் செல்ல வழி வகுக்கும்.

91. ஒரு சில உறவுகள் பார்க்காமல் இருந்தாலும் பேசாமல் இருந்தாலும் சரி நினைவுகள் இருந்துக்கொண்டே இருக்கும். அந்த நினைவுகள் அவர்களை அருகில் சேர்க்கும்.

92. பிறப்பு ,இறப்பு இவ்விரண்டும் தீர்மானிப்பது கடவுள் என்பவரே. நம் வாழ்க்கை எப்படி இருக்க வேண்டும் என்று தீர்மானிப்பது மட்டுமே நாம். சரியாக அமைவதும் தவறாக அமைவதும் சூழ்நிலைப் பொறுத்து இருக்கிறது. சிந்தித்துச் செயல்படுங்கள்.

93. எதிர்ப்பார்க்காதது அனைத்தும் நிகழ்வதே வாழ்க்கை. முடிந்தவரை ஏற்றுக்கொள் நீ என்ன செய்தாலும் அவற்றை மாற்ற முடியாது. வருந்தாமல் கடந்துச் செல்.

94. நமக்கு 1000 தடைகள் வரலாம். ஆனால் அந்தத் தடைகள் போக 1000 வழிகள் உண்டு என்பதை மறந்துவிடாதே.

95. உன்னை எப்போதும் திட்டிக்கொண்டே இருந்தால் நீ வேலை சரியாகப் பண்ணவில்லை என்று அர்த்தம் அல்ல. உன் வேலையைப் பார்த்துப் பொறாமைபடுகிறார்கள் என்று அர்த்தம். நீ யாரையும் கண்டுக்கொள்ளாமல் உன் வேலையை செய்து கொண்டே இரு.

96. உனக்கு நீயே ஊக்கப்படுத்திக் கொள்ளும் ஆற்றல் இருந்தால் எவராலும் உன்னை வீழ்த்த முடியாது.

97. அடுத்த நிமிடம் நிலையானது இல்லை என்னும் சூழலில் வாழ்கிறோம். பணம், இந்தப் பொருள் இன்று நம்மிடமிருப்பது நேற்று வேரொருவருடையது நாளை இன்னொருவருடையது. எதுவும் நிரந்திரமில்லை. இருக்கும் வரை பிறருக்கு உதவி அன்போடு இருப்போம்.

98. காதல் என்பது ஓர் அழகிய அனுபவம். காதல் என்பது அனைத்து உயிர்களிடமும் உண்டு. அனைத்து உறவுகளும் கண்களில் இருந்து இதயத்தில் முடியும். ஆனால் காதல் தான் இதயத்தில் தொடங்கி கண்களில் முடியும்.

99. வாழ்க்கையில் எதிர்பாராமல் நிகழும் ஒவ்வொரு சந்தோஷமான நிகழ்வுகளும் இனிமையானவையே. அதைக் கூற வார்த்தைகள் பத்தாது. காலம் முழுவதும் நினைவுகளாய் மனதில் நிற்கும்.

100. எல்லா நேரங்களிலும் எல்லோரும் நம்மைப் புரிந்துக் கொள்ள மாட்டார்கள். நமக்கு துணையாக இருக்க மாட்டார்கள். நீயே உனக்கு துணையாய், வழிகாட்டியாய் இருந்து நம்பிக்கையோடு உன் வாழ்க்கை இலட்சியத்தை அடைய போராட வேண்டும்.

101. உனக்கான ஒருப் பொருள் கிடைக்க வேண்டும் என்றால் அதைப் பெரும் தகுதி, உழைப்பு, நேரம் அனைத்தும் உன்னிடம் இருக்க வேண்டும். அப்போதுத் தான் அதனை நீ பெறுவாய்.

102. எத்தனைச் சொந்த பந்தம் இருக்கிறார்கள் என்பதை விட உண்மையான நல்ல மனிதர்கள் நம்மோடு யார் இருக்கிறார்கள் என்பது முக்கியம். உனக்கு நல்லது நடக்கிறதா என்று எண்ணி சந்தோஷம் அடையும் உறவு உன்னிடம் இருந்தால் மிக அருமையானதாக உன் வாழ்க்கை அமையும்.

103. சந்திப்பும், பிரிவும் நிறைந்ததே வாழ்க்கை. நாம் எப்போது யாரைச் சந்திப்போம், யாரைப் பிரிவோம் என்று யாருக்கும் தெரியாது. ஆனால் இறைவன் சரியான நேரத்தில் சரியான உறவுகளை நம் வாழ்க்கையில் அனுப்பி வைப்பார்.

104. உலகத்தில் மிக கொடுமையானது எல்லாருடனும் இருந்தும் யாரும் புரிந்துக் கொள்ளாமல், அரவணைப்புக் கிடைக்காமல் தனிமையில் வாடுவதுத் தான்.

105. யாரும் இங்கே சரியானவரும் இல்லை, தவறானவரும் இல்லை. எல்லாம் காலம் செய்யும் மாயமே. வேலைச் செய்வதுப் போல நடிப்பவரை மதிக்கிறது. உண்மையாய் உழைப்பவரைக் குறைக் கூறித் தரையில் மிதிக்கிறது இவ்வுலகம்.

106. காதல் ஒருவர் மீது நமக்குத் தோன்றக் காரணம் இதுவரை யாரிடமும் கிடைக்காத அன்பும், சந்தோஷமும் ஒருவரிடம் கிடைப்பதால் தான்.

107. நம்பிக்கை இல்லாமல் இருக்கும் போது நம்பிக்கையாய் காலம் முழுவதும் வரும் உறவு அரிதானது.

108. காதல் என்ற உறவு மட்டும் தான் நம்மையும், நம் எதிர்கால வாழ்க்கையை அழகாக்கும்.

109. பிறர் எதிர்ப்பார்க்காமல் நீ அவர்களுக்குக் கொடுக்கும் அன்பான வார்த்தையும், சந்தோஷமும் உன் எதிர்கால வாழ்க்கையை இனிமையாக அமைத்துக் கொடுக்கும்.

110. என்னிடம் திறமை இல்லை என்று கவலையில் இருந்தேன். என்னையேத் தனித்திறமையாக உலகில் தனித்திறனோடு செயல்பட இறைவன் படைத்துள்ளார் என்று இப்போது தான் உணர்ந்தேன்.

111. நாம் ஒன்றை எதிர்ப்பார்க்கும் போது நம் வாழ்க்கையில் கிடைக்காது. நாம் கிடைக்காது என்று இருக்கும் போது எதிர்பாராமல் கிடைக்கும் அதுவே வாழ்க்கை. ஏனென்றால் வாழ்க்கையின் சுவாரஸ்யத்தை அறியவே கடவுள் நம்மை வைத்து விளையாடுகிறார். எல்லாம் உடனேக் கிடைத்து விட்டால் அதன் மதிப்பு நமக்குத் தெரியாது.

112. கடைசி வரை குழந்தையாக யாராலும் வாழ முடியாது. ஆனால் நமக்குள் உள்ள குழந்தைத்தனத்தை அழிக்க முடியாது. எனக்குள் இருக்கும் குழந்தைத்தனமும், குழந்தையின் மழலைக் குரலே என்னுடைய பலம். எந்த பிரச்சினையும் குழந்தையைப் போல எதிர்க்கொள்ளுங்கள். வாழ்க்கை மகிழ்ச்சியாய் இருக்கும்.

113. பிறரைப் போல நான் இல்லை என்றக் கவலை எனக்கு இல்லை. நான் நடந்துக்கொள்வதைப் பார்த்து சிரிக்கிறார்கள் என்றக் கவலையும் எனக்கு இல்லை. பிறரைப் போல நான் இல்லை என்பதே என் அடையாளம். என்னுடைய குழந்தைத்தனம், குழந்தையின் மழலைக் குரலே என்னுடைய பலம். பிறரைச் சிரிக்க வைக்கப் பயன்படும் கருவியாக நான் இருக்கிறேன் என்பதே எனக்கு மகிழ்ச்சி.

114. வண்ண ஆடைகளை உடுத்தி வண்ண வெடிகளை வெடித்து இனிப்புகளை உண்ணு புத்துணர்ச்சியாய் புதிதாய் மகிழ்ச்சியோடு வண்ணமயமாய் கொண்டாடுங்கள். இனிய தீபாவளி பண்டிகை நல்வாழ்த்துக்கள் 🎆🎉

115. புதிய அத்யாயம் எப்போது நம் வாழ்க்கையில் தொடங்கும் என்றுத் தெரியாது. ஆனால் நம் வாழ்வை அழகாய் இறைவன் எழுத வைப்பார். எப்போதும் உன் வாழ்வை மாற்றி எழுதத் தயாராக இரு. உனக்கான வெற்றி உன்னைத் தேடி வரும்.

116. ஒருவர் ஒரு விஷயத்தை அவர்களிடம் கூறியதும் அவர்கள் அதை அதேக் கண்ணோட்டத்தில் பார்க்காமல் அவர்கள் குணம் சரியில்லை என்று முடிவுச் செய்து விலகிவிடுகிறார்கள். ஆனால என்ன நினைத்துப் பேசினார்கள் என்று பொறுமையாக யோசித்து அவர்களிடம் மனம் விட்டுப் பேசினாலே இங்கு பிரச்சினைகள் உருவாகாமல் இருக்கும். ஆனால் அதனைச் செய்ய மனிதரின் மனம் முன் வருவதே இல்லை.

117. உனக்கானது என்று இறைவன் முடிவு செய்து விட்டால் அதை உனக்குக் கிடைக்க விடாமல் தடுக்க எவராலும் முடியாது. உனக்கு எந்த வழியிலாவதுக் கொண்டு வந்துச் சேர்ப்பார். அதற்கு இடையில் ஏற்படும் பிரச்சினை முடிச்சுக்களை அவரே அவிழ்த்துக் கொடுப்பார். பொறுமையுடன் காத்திரு.

118. ஒருவரைப் புகழ்ந்து பேசுவதற்கு யோசிக்கும் மனம் ஒருவரைப் பழிச் சொல்லி இகழ்வதற்கு யோசிப்பதே இல்லை.

119. உன் வாழ்க்கையின் குறிக்கோளை அடைய முயற்சி செய். அதற்கு நடுவில் ஏற்படும் தடைகள் யாவும் விண்கற்கள் போல் வெடித்து சிதறும். இந்த இடைக்காலக்கட்டத்தில் உண்மையான உறவுகளை நீ அறிவாய்.

120. பொறுமையுடன் காத்திரு. உன் மீது பிறர் செய்யும் விமர்சனங்கள், உன்னைத் தவறாக எண்ணியது அனைத்தும் பொய்யாய் மாறும் நாள் வெகு தூரத்தில் இல்லை.

121. வெவ்வேறு எண்ணங்கள் கொண்ட மனிதர்கள் சேரும் போது வார்த்தைகளாலும், செயல்களாலும் சண்டைகள் வருவது வாழ்க்கையில் இயல்புத் தான். ஆனால் அன்பால் அனைத்தையும் சரி செய்ய முடியும். தீராதப் பிரச்சினை என்று இந்த உலகத்தில் இல்லை. மனம் தளராதே. எல்லாம் நன்மையாகவே நடக்கும்.

122. பிரச்சினை வரும் போது எல்லாக் கதவுகள் அடைத்ததுப் போலத் தோன்றும். ஆனால் நமக்குத் தெரியாமல் வேறு ஒரு கதவிற்கான வழி இருக்கும். அதைக் கண்டுப்பிடி. இல்லையெனில் கதவிற்கான வழியை நீயே உருவாக்கு.

123. உன் மனம் சரியில்லாத நிலை ஏற்படும் போது உனக்கு பிடித்ததைச் செய்து மனதை திசைத் திருப்பு. சந்தோஷமான நினைவுகளை நினைத்து மனதை மகிழ்ச்சியாய் வைத்துக்கொள். அதுவே உன் மனதின் நிலையை மாற்றி அமைக்க உதவும்.

124. முதல் பாதிப் பெற்றோர் சொல் கேட்டு, கடைசிப் பாதி வாழ்க்கைத் துணை சொல் கேட்டு, அதற்கு இடையில் உடல் வலியால் (மாத வலி, பிரசவ வலி), சமூகத்தின் சொல் கேட்டு மனதின் வலியால் வலிகளிலே கழிந்து விடுகிறது பெண்ணிண் வாழ்க்கை. தனக்காக என்ன வாழ்ந்தால் என்று யோசித்துப் பார்த்தால் அதில் அவளுக்காக எங்கும் வாழவே இல்லை. தனக்காக வாழ வேண்டும் என்று கேட்டால் சுயநலவாதி, திமிருப் பிடித்தவள், அடங்காப்பிடாரி என்றப் பெயர் அவளுக்கு.

125. நம் நினைவுகள் பலத் தொலையலாம். நினைவுகள் தொலைந்தாலும் நம் கனவுகள் தொலையாது. ஏனென்றால் கனவுகள் நம் மனதில் புதைந்து இருப்பது நம் உயிர் சென்றப்சென்றப்பின் கனவுகள் நம்மை விட்டுச் செல்லும்.

126. வாழ்க்கை நம்மிடம் இருக்கும் போது எது சரி, எது தவறு என்றுத் தெரிவதில்லை. தெரிந்துக் கொள்ளும் போது வாழ்க்கை நம்மிடம் இருப்பதில்லை.

127. நமக்கு எத்தனை சந்தோக்ஷங்கள் கிடைத்தாலும் ஒரு கவலை வந்து விட்டால் அனைத்தும் மறைந்துவிடும்.

128. நாம் ரத்தத்தில் உருவானப் பந்தமில்லை. நாம் அன்பில் உருவானப் பந்தம். இவ்வுலகமே அழிந்தாலும் நம் அன்பு, பாசம் அழியாமல் என்றும் நிலைத்து இருக்கும்.

129. எந்த ஒரு செயலையும் எடுத்தவுடன் இவ்வளவு அதிகமாக இருக்கிறது என்று பெரியதாக சிந்திந்து உன்னை சிரமப்படுத்திக் கொள்ளாதே. முதலில் எது முக்கியம் என்றுப் பார்த்து அதில் கவனம் செலுத்து அதுவே உன் மிகப் பெரிய இலக்கை சுலபமாக அடைய உதவும்.

130. மனிதனின் கவலை என்றும் தீர்வதே இல்லை. சிறுவயதில் படிப்பதுக் கவலை. படிப்பு முடிந்ததும் வேலைத் தேடிச் சேர்வதுக் கவலை. சேர்ந்த வேலையை நினைத்துக் கவலை. பிறகு எதிர்கால வாழ்க்கைக் கவலை.

131. முன்பெல்லாம் குடும்ப விழாக்கள் என்றால் ஒன்றாகச் சேர்ந்துக் கூடி மகிழ்ந்துக் கொண்டாடுவார்கள். ஆனால் இப்போது கடமைக்கு கலந்துக் கொண்டு மனதில் பிறர் மீது வெறுப்போடும், பொறாமையோடும் பார்த்து விட்டு விலகிச் செல்கிறார்கள்.

132. மனிதர்கள் பழகும் போது பாசத்தோடும், அக்கறையாக இருப்பதுப் போல நடந்துக் கொள்கிறார்கள். பின் அவர்கள் தேவை முடிந்ததும் அப்படிப் பேசிப் பழகவே இல்லை என்பதுப் போல விட்டு விலகிவிடுகிறார்கள்.

133. நமக்குப் பிடித்ததைப் பிடித்தவரோடுச் செய்யும் விஷயம் வாழ்க்கையில் ரொம்ப அழகானது. அதை விட நமக்குப் பிடித்தது நம்மைப் பிடித்தவர்களுக்கும் பிடித்தமாக இருந்தால் அந்த வாழ்க்கை முழுவதும் மகிழ்ச்சியாய் அமையும்.

134. ஒரு விஷயம் நாம் செய்யும் போதும், நமக்கு நிகழும் போதும் இதை எப்படிச் செய்து முடிக்கப் போகிறோம், எப்படி நிகழுமோ என்பதுப் போலத் தோன்றும். உன் இலக்கில் நீ தெளிவாக இருந்தால் உன் செயல் சரியாக இருந்தால் விரைவில் முடியும். அதற்கு இறைவன் உனக்கு உதவுவார் கலங்காதே.

135. உன் இலக்கை அடைய உதவும், உன்னை உயர்த்திப் பார்க்கும் உறவு உன்னுடன் இருக்கும் வரை உன் வெற்றி என்பது வெகுத் தூரத்தில் இல்லை. தோல்வி உன்னை நெருங்காது.

136. கனவே இல்லாமல் இருந்தேன் கனவாய் நீ வந்தாய். வாழ ஆசையே இல்லாமல் இருந்தேன் ஆசையாய் நீ வந்தாய். வாழ வழித் தெரியாமல் நான் இருந்தேன் வழித்துணையாக நீ வந்தாய். சிறைக் கைதிப் போல நான் இருந்தேன் விடுதலையாய் பறக்க சிறகாய் நீ முளைத்தாய். பிறர் கண்டும் காணாமல் இருந்த என்னை கண்டு காணாதப் புதையல் போல பேணிக் காக்க வந்தாய் என் உயிரே என் எதிர்கால உறவே.

137. மழைச் சாரல் போல உன் நினைவுகள் என்னை நனைக்கிறது. மின்னலைப் போல பிரகாசமாக உன் முகம் என் மனதில் பதிந்துள்ளது . இடியைப் போல உன் அன்பு என்னைத் தாக்குகிறது. அதிலிருந்து மீள முடியாமல் தவிக்கிறேன்.

138. எல்லாவற்றிற்கும் எல்லை மற்றும் அளவு என்பது உண்டு. ஆனால் அன்புக்கு மட்டும் இதுதான் எல்லை இதுத் தான் அளவு என்றுக் கூற முடியாது. அன்பிற்கு எல்லை, அளவு என்று ஏதுமில்லை.

139. கடைசி வரைத் துணையாக இன்பத் துன்பங்களைப் பகிர்ந்து அன்புடன் வாழவேத் திருமண உறவைப் படைக்கப்பட்டது. ஆனால் மனிதர்கள் இதைத் தொழிலில் வருமானம் பெருக்குவதுப் போல வரதட்சணை வாங்குகிறார்கள்.உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் ஜாதி, மதம் என்று பார்த்து வாழ்வை அழித்துக் கொள்கிறார்கள்.ஆண் அவரது வீட்டாரும் எப்படி நடந்துக் கொண்டாலும் பொறுத்துப் போ என்று

பெண்ணைச் சொல்லும் சமூகம் ஆண்களை பெண்ணைப் புரிந்து நடந்துக்கொள் இப்படிச் செய்யாதே என்றுக் கூறுவதில்லை.

140. எழுத்துக்களை எழுதுவது அவ்வளவு எளிதல்ல. வார்த்தைகளைச் சரியாக அமையவில்லை என்றால் அர்த்தம் மாறிவிடும். எழுத்துக்களை உணர்வுகளோடு உயிர்க்கொடுத்து எழுதினால் தான் கவிதை என்னும் சொற்கள் பிறக்கும்.

141. பிடித்தவருடன் எவ்வளவு மணிநேரங்கள் பேசினாலும் சில விநாடிகள் முடிந்ததுப் போலத் தோன்றும். ஆனால் அந்த உரையாடலுக்காக பல மணிநேரம் ஏக்கத்துடன் காலம், சூழ்நிலைக் காத்திருக்க வைக்கும்.

142. மனிதனின் உணர்வு என்பது ரொம்ப அழகானது. அதை உணர வைக்க அன்பானவராலும், நம்பிக்கையுடையவரால் தான் முடியும். ஏனால் எல்லார் மீதும் உணர்வுகள் தோன்றாது.

143. பெண்ணின் மனதைப் புரிந்து அவள் உணர்வுகளுக்கு மதிப்பளித்து நடந்துக்கொள்ளாதவன் ஆண்மகனே இல்லை. அவன் பிணத்திற்கு ஒப்பானவன்.

144. வாழ்க்கையில் எல்லாவற்றையும் இழந்த நிலை ஏற்பட்டாலும் மனம் உடைந்து போய் வீழ்ந்தாலும் உன் மீது அன்பைக் கொட்டித் தீர்த்து உன்னை மேல் நோக்கி உயர்த்திப் பார்க்கும் நபர் உன்னுடன் இருந்தால் போதும் அனைத்தையும் கடந்து விடலாம்.

145. இசை என்பது சத்தம் மட்டும் அல்ல உணர்வோடுக் கலந்தது. அதனைப் போல் உன் நினைவுகள் உணர்வுகளோடு கலந்து என்னுள் வாழ்கிறாய்.

146. படித்து முடித்தவுடன் வேலைக் கிடைத்தால் போதும் கிடைக்கின்ற சம்பவத்தை வைத்து மகிழ்ச்சியாய் வாழலாம் என்றுத் தோன்றும். வேலைக் கிடைத்தால் சிறிது நாட்களில் என்ன வேலை இது நிம்மதியாக வாழ்ந்தால் போதும் என்று ஆகிவிடுகிறது.

147. எல்லா உறவும் நம்பிக்கையில் தான் உருவாகிறது. எதையும் வெளிப்படையாக நம்மைப் பற்றி அனைத்தையும் பகிர நம்பிக்கை உள்ளவர்களிடம் தான் முடியும். அப்படிப்பட்ட உறவு தான் பலமாக இருக்கும்.

148. எவ்வளவு வேலை இருந்தாலும் பிடித்தவர்களுக்காக நேரத்தை ஒதுக்கிச் செலவிடும் உறவுக் கிடைப்பது வரமே.

149. எவ்வளவு இக்கட்டான சூழ்நிலையையும் உன்னால் சமாளிக்க முடியும் என்றால் உன்னை விடச் சிறந்த மனிதர் இந்த உலகில் இல்லை.

150. உன்னால் தவறு நடந்து விட்டது என்று எண்ணாதே. அந்த தவறு நிகழவில்லை என்றால் அதை விட மோசமாக நிகழ நேரிருக்கும். கெட்டத்திலும் நல்லது நிகழ்ந்தது என்று நினைத்துக் கொள்.

151. எவ்வளவுக் கஷ்டம் வந்தாலும் மனதிற்கு பிடித்தவரைப் பார்த்தால் அனைத்தும் மறந்துப் போகும்.

152. உன் தகுதியை உயர்த்திக் கொண்டே இரு. அப்போது தான் எவரும் வெல்ல முடியாத இடத்தில் நீ இருப்பாய். எந்த நிலை வந்தாலும் அதை நீ எளிதாகக் கடக்க முடியும்.

153. பெண்ணிற்கு அவளதுப் படிப்பும், வேலையும் தரும் பாதுகாப்பும், தன்னம்பிக்கையும் வேறு எந்த உறவாலும் தர முடியாது.

154. பிரச்சனைகள் வந்ததும் அமைதியாக அதன் போக்கில் விட்டுவிடுங்கள். விரைவில் அனைத்தும் சரியாகும். அதைப் பற்றி யோசித்து உங்களைக் கஷ்டப்படுத்திக் கொள்ளாதீர்கள்.

155. எவ்வளவு கடினமான நிலை வந்தாலும் அவற்றைக் கடக்க ஒரு சில மனிதர்களால் மட்டும் தான் முடியும். அப்படிப்பட்ட மனிதருக்கு அவர்களது வாழ்க்கையே வெற்றித் தான்.

156. தரையில் உள்ள கோலம் தண்ணீர் ஊற்றினால் அழியும். ஆனால் மனதில் உள்ள எண்ணங்களை அளிக்க எவற்றாலும் முடியாது.

157. பறவைகள் சிறகை விரித்துப் பறக்கும் வரைத் தெரிவதில்லை வானில் உயரமாகப் பறக்க முடியும் என்று. அதுப் போலத் தான் மனிதனுக்கு நம்பிக்கையும், வாய்ப்பும் கிடைக்கும் வரை அவர்களது வாழ்க்கை உயரும் என்று.

158. நினைத்தது நடக்காததுப் போல் இருக்கும். ஆனால் வாழ்க்கை நினைத்தை விட அழகாய் மாறப் போகிறது என்று யாரும் அறிவதில்லை. வாழ்க்கையின் மாயாஜாலத்தை உணர மட்டுமே முடியும்.

159. ஒரு சில நேரங்களில் மனதிற்கு ஏற்றுக் கொள்ள முடியாத விஷயங்கள் நிகழும். அப்போது நிம்மதி, சந்தோஷம் பெற தியாகம் செய்தால் மட்டுமே இந்த சமுகத்தில் பெண்களால் வாழ முடியும்.

160. வேலை இல்லை என்றால் பிறர் மதிக்க மாட்டார்கள், பிறருக்குப் பாரமாக வாழக் கூடாது என்று ஏதோ வேலைச் செய்து வருமானத்தை ஈட்டி குடும்பப் பாரத்தை சுமந்து, ஆரோக்கியத்தை இழந்து எப்படியோ வாழ வைக்கிறது மனித வாழ்க்கை.

161. கலை என்பது உணர்வுகளுக்கு உருவம் கொடுத்து ஆசைகளுக்கு வண்ணம் பூசிப் படங்களாகச் சித்தரித்துப் பிறர் முன்புக் காட்சியளிக்க வைப்பது. கலையில் மட்டும்தான் நம் எண்ணங்களை நம் விருப்பம் போல் உருவாக்கிப் பார்க்க முடியும்.

162. ஒன்றாக ஒற்றுமையோடு ஒரே நேரத்தில் ஒரு விஷயத்திற்காக வேலைப் பார்க்கும்போதுத் தான் பிறரின் திறமையும் பிறரின் மன நிலைகளை அறிய முடிகிறது. அப்போது தான் யார் மீதும் பாகுபாடுப் பார்க்காமல் வேலைக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

163. சிறுவயதில் பிள்ளைகளுக்கு என்ன தேவை என்று பார்த்துச் செய்யும் பெற்றோர் விட பிள்ளைகள் வளர்ந்து வேலைக்குச் சென்றப் பின்னும் குழந்தையாய் பார்த்துக்கொள்ளும் பெற்றோர் கிடைப்பது விலைமதிப்பில்லாப் பொக்கிஷம் போன்றது.

164. எல்லோருக்கும் பிடித்தவராக யாராலும் வாழ முடியாது. எல்லாருக்கும் பிடித்தவராக இருந்தால் ஒரு இடத்தில் நிலையாக இருக்க முடியாது.

165. உதவிச் செய்யும் நோக்கத்தோடு நாம் செய்கிறோம். ஆனால் அதைப் புரிந்துக் கொள்ளும் மனப்பக்குவம் மற்றவர்களுக்கு இல்லை. அதைப் புரிய வைக்கும் ஆற்றலும் எனக்கு இல்லை. குறைக் கூற மட்டும் மனிதர்கள் இங்கு பஞ்சமே இல்லை.

166. உணர்வுகளை வெளிப்படுத்த முடியாமல் என்னை இறைவன் படைத்தது ஏனோ என்ற எண்ணம் எனக்கு இல்லை. ஏனென்றால் உணர்ச்சிகள் இருந்தும் பிறர் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காமல் வாழுகின்ற மானிடர்கள் விட நான் மேலானவள் என்ற மனமகிழ்ச்சி எனக்கு உண்டு.

167. நாட்கள் ஆண்டுகள் ஓடிக் கொண்டே இருக்கிறது ஆனால் மனிதர்களின் மனதில் நல்ல எண்ணங்கள் உருவாகாமல் அழிந்துக் கொண்டே இருக்கிறது.

168. எல்லோரும் கூட இருந்தும் தனியாக இருப்பதும், தனியாக உணர்வதும் மிகக் கொடுமையானது.

169. பள்ளி விழாவில் தான் ஒன்று சேர்ந்து பல பேரின் முயற்சியால் பலரின் திறமையைக் கண்டு ஒட்டு மொத்த அரங்கமும் வண்ணமயமாக மகிழ்ச்சியாகக் கொண்டாடி அந்த ஆண்டின் நினைவாய் மனதில் பதிந்து நிற்கிறது.

170. குடும்பப் பாரத்தை நீ சுமக்கத் தொடங்கிவிட்டால் உன் மனதின் பாரத்தை சுமக்க உன் வாழ்க்கையை அழகாய் அமைக்க இறைவன் தொடங்கிவிடுவார். எதைப் பற்றியும் சிந்திக்காமல் உன் பயணத்தைத் தொடர்ந்துக் கொண்டே இரு.

171. சாலையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க சாலை விதிமுறைகள் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதனை மதிக்காமல் பலர் பந்தயத்தில் முன் செல்வதுப் போல் எண்ணி பயணித்து விபத்தில் சிக்கி வாழ்க்கைப் பயணத்தை இழக்கின்றனர்.

172. என் காதல்

என் உலகம்

என் வாழ்வின் அர்த்தம்

என் தன்னம்பிக்கை

என் அடையாளம்

என் உயிர்

என் இறைவன்

என் வழிகாட்டி

தமிழ் மொழியே.

தமிழ் மொழிக்காகவே இந்த வாழ்க்கை.

173. இதுவரைத் தரையை மட்டுமேப் பார்த்து நடந்த என் விழிகள் உன்னைப் பார்க்கவேத் தலை நிமிர்ந்தேனடா. எந்த ஆணிடமும் பேசாமல் இருந்த நான் உன்னால் தான் பேசத் தொடங்கினேன்.

174. பிறரின் நலனில் கவனம் செலுத்தும் நட்பு அமைவதெல்லாம் எளிதல்ல. அப்படி அமைந்தால் கடவுளின் கருணை உன் மீது இருக்கிறது என்று அர்த்தம்.

175. வானில் நட்சத்திரங்கள் பிரகாசிக்க இருள் தேவைப்படுகிறது. அதுப் போல உன் திறமை உலகிற்கு வெளிப்பட நேரம் தேவைப்படுகிறது.

176. மதிப்பெண் என்பது முக்கியமல்ல. மனிதர்கள் உன்னை மதிப்பிடுவது விட இறைவனின் மதிப்பீடு தான் முக்கியம். ஏனென்றால் மனிதர்கள் உன்னைப் பற்றி எண்ணுவதெல்லாம் உண்மையல்ல.

177. ஆசைகள் எல்லாம் நிராசையாகும் பணம் என்னும் காகிதத்தின் முன்.

178. வாழ்க்கையில் ஒரே இடத்தில் நிற்பவரை விட ஓடுபவரைத் தான் உலகில் அதிகமாகக் கவனிக்கப்படுவார்கள். அவர்களுக்குத் தான் மதிப்பு அதிகம் கிடைக்கும். எனவே உனக்கானப் பாதையை உருவாக்கி ஓடிக் கொண்டே இரு.

179. ஆரம்பத்தில் நாம் யாரை நண்பர்களாக எண்ணுகிறோமோ அவர்கள் தான் எதிரியாகிறார்கள், யாரை எதிரியாக எண்ணுகிறோமோ அவர்கள் தான்

நண்பராகிறார்கள். எல்லாம் இழந்தப் பிறகுத் தான் அனைத்தும் புரிய வைக்கிறது வாழ்க்கை.

180. வாழ்வில் அறிமுகம் இல்லாத மனிதர்களை அறிமுகம் ஆக்கி வார்த்தைகள் மூலம் இணைத்து உறவு என்னும் பெயரில் வாழ வைக்கிறது.

181. நாட்கள் நகர நகர புதிய கட்டிடம் உருவாவதுப் போல உணர்வுகள் பக்குவப்பட்டு உலகின் நிலைமையை அறிந்து தனியாய் செயலை செயல்படும் ஆளுமைத் திறனைக் கொடுக்கிறது மனிதனின் அனுபவங்கள்.

182. உன்னால் எந்த ஒரு செயலையும் சரியாகச் செய்ய முடியாமல் இருக்கலாம். ஆனால் சரியானப் பாதையில் செல்லவும் சரியான முறையில் வாழவும் உன்னால் முடியும். அன்பின் உருவம், தன்னம்பிக்கையின் திறன் கண்டு உன்னைப் போற்ற இந்த உலகமே காத்திருக்கிறது.

183. வெளிப்படையாகத் தெரியும் பொருளை விட கடலில் மறைந்து இருக்கும் முத்துக்கு மதிப்பு அதிகம். அதுப் போல உன்னுள் மறைந்து இருக்கும் திறமைக்கு மதிப்பு அதிகம்.

184. கனவுகள் இல்லாத வாழ்க்கை உயிரற்ற உடலைப் போன்றது. உன் வாழ்கையைச் சரியாக அமைக்க உதவுவது உன் கனவுகளும், நம்பிக்கையையும் தான்.

185. உலகில் சுதந்திரமாக வாழ கிடைத்தது இவளுக்கு மோக்ஷா. பலருக்கு இவளால் கிடைக்கும் சந்தோஷம் அமரகோஷா. எப்படிப்பட்ட நிலை வந்தாலும் தன் விடாமுயற்சியுடனும், திறமையுடனும் கடந்து வருபவள் தான் வர்ஷா.

186. தொழிலில் முதலீடுவதுப் போல் வரதட்சணைக் கொடுத்து பிறர் தேவைக்கு பயன்பட்டு வாழ்வைத் தொலைப்பதை விட தனிமையே மேல்.

187. புத்தம் புது வருடம்,

புத்தம் புது நாள்,

புத்தம் புது நினைவுகள்,

புது சந்தோஷம் மலர்ந்து,

கண்ணீர்கள் மறைந்து வாழ்வில் வளம் பெற்று வளமுடன் வாழ

இனிய புது வருட நல்வாழ்த்துக்கள்.

188. உணவைச் சரியான நேரத்தில் சரியான அளவில் உண்ணப் பழகிக் கொள்ளுங்கள். நீ சொல்வதைக் கேட்கும்படி உடலை வைத்துக்கொள். இல்லையென்றால் உன் உடல் சொல்லும் படி நீ மாற நேரிடும்.

189. நம் உடம்பிற்கும் உருவத்திற்கும் தான் வயது ஆகும். நம் மனதிற்கு இல்லை. எனவே எப்போது வேணாலும் சாதிக்கலாம் மனதில் துணிவு இருந்தால்.

190. வாழ்க்கை என்பதுத் திரைப்படம் போல அதில் உன் கதாப்பாத்திரம் எப்படி இருக்க வேண்டும் என்று உன் எண்ணங்களிலும், உன் கைகளில் தான் உள்ளது. உன் செயலைப் பொருத்து தான் கதையின் முடிவு இருக்கிறது.

191. ஒரு ஆசிரியருக்கு சிறந்த வாழ்க்கைப் பரிசு எதுவென்றால் அவரிடம் படித்த மாணவர்/ மாணவி நன்குப் படித்து வெளியேறியப் பின் சிறந்த ஆசிரியையாக மாறி அவர்கள் முன் நிற்பதுதான்.

192. உன் உயர்வைக் கண்டுப் பொறாமைப்படாமல் பெருமைப்படும் உறவுகளை நீ கொண்டுள்ளாய் என்றால் அதுவே உன் வாழ்க்கையின் மிக சிறந்த வெற்றியாகும்.

193. கல்யாணம் என்பது இருமணங்களும் இருக்குடும்பத்தினரும் உறவுகளாய் இணைவது. இன்பத் துன்பங்களிலும் ஒன்றாக நின்று வாழ்க்கையை அழகாக அமைப்பது. ஆனால் இப்போது மனிதர்கள் பணத்திற்காகத் திருமணம் செய்து பெண்களைத் தேவைக்காகப் பயன்படுத்திக் கொண்டு உறவை உதறிச் செல்கின்றனர். பெண்களுக்கும் உணர்வுகள் உண்டு என்றுப் புரிந்துக் கொள்ளாமல் அவளையும் அவளதுக் குடும்பத்தையும் வேதனைப்படுத்தி ஆண்களின் பெற்றோர்கள் சந்தோஷம் அடைகின்றனர். பெண்ணிற்குத் துணையாக நிற்க வேண்டிய கணவனும் துணையாக இல்லாமல் அவனது பெற்றோர் பக்கம் இருந்தால் இந்த உறவில் என்ன அர்த்தம் இருக்கிறது? இதற்கு எதற்கு திருமணம்?

194. ஆணுக்குப் பெண் சமம் என்கின்றனர். ஆனால் பெண் முன்னேறிச் செல்வதையும், வேலைக்குச் செல்வதையும் இன்னும் தடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

195. பெற்றோர்களை அன்புடன் கவனித்துக் கொள்வது மட்டுமல்லாமல் அவர்களை ஏளனமாக நடத்திய உறவினர்கள் முன்பு தாழ்ந்துப் போக விடாமல் பெருமையாக வாழ்ந்துக் காட்டுவதுதான் மிகச்சிறந்த பதிலடி.

196. மனதில் தோன்றுவதைக் கூட சுதந்திரமாக பேச முடியாமல் வார்த்தைகளைக் காதுக் கொடுத்து கேட்க யாருமில்லாமல் எழுத்துக்களால் மட்டுமே என் உணர்வுகளை வெளிப்படுத்த முடிகிறது.

197. நாம் யாரும் கடவுளை அதிகமாக நம்புவதில்லை. ஆனால் நமக்கு நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டால் கடவுள் நினைவு வராமல் இருப்பதில்லை.

198. அன்பு எப்போதும் மாறுவதில்லை. அன்பு வைத்திருக்கும் மனிதர்களே மாறுகின்றனர்.

199. ஒரு ஆண் எப்படி வாழ்ந்தாலும் அவன் ஒரு ஆண் என்றுக் கூறி கண்டுக்கொள்ளாத உலகம் ஒரு பெண் எப்படி வாழ்ந்தாலும் குறைக் கூறி முடக்கச் செய்கிறது.

200. பள்ளியில் படிக்கும்போது தமிழ் ஆசிரியை ஆகவே கனவுக் கொண்டேன். ஆனால் தமிழுக்கும், தமிழ் ஆசிரியருக்கும் மதிப்பு இல்லை என்று வீட்டோர் கூறி வற்புறுத்தியதால் வணிகம், கணக்கியல் படித்தேன். ஆசிரியராகப் பணிப்புரியவேக் கிடைத்த வேலையை மகிழ்ச்சியாகச் செய்கிறேன். இன்னும் எந்தன் கனவை நனவாக்க முடியாமல், வாய்ப்புக் கிடைக்காமல் நாட்களை நகர வைக்கிறது காலம்.

201. பொங்கல் பொங்குவதுப் போல சந்தோஷம் பொங்கி,

உறவுகள் இணைந்து இனிப்பான வாழ்க்கை அமைந்து,

வளங்கள், ஆரோக்கியம், மன நிம்மதி பெற்று,

நாளை விடியும் கதிரவன் ஒளியைப் போல உங்கள் வாழ்வில் வழி பிறக்கட்டும்.

இனியப் பொங்கல் நல்வாழ்த்துக்கள்.

202. கோலத்தை அழகாக்க நிறங்களாலும் , பொறுமையாலும் முடியும் . உன் வாழ்க்கையை அழகாக்க உன் வார்த்தைகளாலும், உன் குணத்தால் தான் முடியும்.

203. ஃபோனில் விளையாடி நேரத்தைத் தொலைப்பதை விட உலகம் என்னும் மைதானத்தில், வாழ்க்கை என்னும் விளையாட்டில் , கனவு என்னும் இலக்கை அடைய அமைதியாக உன்னை உருவாக்கிடு . பட்டாசுகள் வானில் வெடித்து ஜொலிப்பதுப் போல உன் வெற்றி உலகம் முழுவதும் ஜொலிக்கும்.

204. பணம், பொருட்செல்வத்தைச் சேர்த்து வைக்க முயற்சிப்பதில் மனிதர்கள் செவிச் செல்வத்தையும் , அறிவுச் செல்வத்தையும் இழக்கின்றனர் . பிறர் பேசுவதைக் கேட்காமலும், பிறர் உணர்வுகளை உணராமலும்.

205. பிறக்கும் போது எதைப் பற்றியும் யோசிக்காமல் நடக்கத் தொடங்கினோம் , படிக்கத் தொடங்கினோம் . வளர்ந்தப் பிறகு எதிர்பார்த்து வாழ்வைத் தொலைக்கிறோம்.

206. மற்றவர்களைச் சந்தோஷப்படுத்த வேண்டும் என்று நினைக்காதே , நிறைய நடிக்க வேண்டி இருக்கும். உன் மனதைச் சந்தோஷமாக வைத்துக் கொண்டு வாழ் , உன் உண்மைத் தன்மை அதிகரிக்கும்.

207. பெண்களுக்கு பெயரின் பின்னால் உள்ளப் பெயர் மாறும் . ஆனால் அவள் பெயருக்குப் பின்னால் சேரும் படிப்பை மாற்ற முடியாது.

208. இந்த உலகத்தில் எதுவும் உண்மையானது , நிரந்தரமானது இல்லை . உன்னுடையத் தன்னம்பிக்கையும், தனிமையும் தவிர.

209. ரத்தப் பந்தமாய் வந்தச் சொந்தங்கள் எல்லாம் வேற்றோர் போல நடந்து கொள்கிறார்கள். வேற்று மனிதர்கள் எல்லாம் ரத்தப் பந்தம் போல பழகுகிறார்கள்.

210. வழியெங்கும் முட்கள் , கற்கள் கொண்டப் பாதையாய் வாழ்க்கைப் பாதை இருந்தாலும் இவ்வளவுத் தூரம் உன்னைக் கூட்டி வந்த இறைவனுக்குத் தெரியும் உனக்கானச் சிம்மாசனத்தில் அமர வைக்க.

211. ஒரு சில நேரங்களில் ஏன் இப்படி எனக்கு நிகழ்ந்தது இப்படி நிகழாமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் எனத் தோன்றும் . ஆனால் அப்படி நிகழாமல் இருந்திருந்தால் உனக்கானப் பாடமும் , வாய்ப்புகளும் கிடைக்காமல் போயிருக்கும்.

212. உன்னால் முடியாது என்று நீயே நினைத்தால் உன்னை நம்புவது யாரு ? கடவுள் உன்னால் எதுவும் முடியாது என்று நினைத்திருந்தால் இந்த வாழ்க்கையே உனக்குக் கிடைத்திருக்காது.

213. சில பேர் நம்மிடம் பேசாமல் மாட்டார்கள் என்று நாம் நினைத்திருப்போம் . திடீரென்று அவர்களிடமிருந்து குறுஞ்செய்தி வரும்போது தான் உணர்கிறேன் என் விடாமுயற்சியும் என் வளர்ச்சியும் அவர்களை என்னிடம் பேச வைத்துள்ளது என்று. நம்முடைய முன்னேற்றத்தைப் பொருத்துத் தான் மனிதர்கள் நம்முடன் இருப்பதும் , நம்மை விட்டு விலகுவதும்.

214. இப்போதெல்லாம் மற்றவரின் மீது இரக்கம் , கருணைக் காட்டக் கூட மனிதத் தன்மை இல்லாமல் போய் விட்டது . மற்றவரின் புலம்பலைக் காதுக் கொடுத்துக் கேட்க கூட மனம் வருவதில்லை.

215. மரத்தை எவ்வளவு வெட்டினாலும் மறுபடியும் துளிர்ந்து விடுகிறது அதன் வலுவான வேர்களைக் கொண்டு . அதுப் போல் எவ்வளவு சொற்கள் உன்னை காயப் படுத்தினாலும் கடந்து செல் உன் நம்பிக்கையான எண்ணங்களைக் கொண்டு.

216. ஒரு தாய் வயிற்றில் பிறந்து ஒரே வீட்டில் பல வருடங்கள் வளர்ந்தாலும் திருமண உறவுகள் வந்ததும் உடன் பிறந்தவர்கள் பந்தம் அற்று விடுகிறது.

217. வாழ்க்கையே உனக்கு வரமாய் கிடைத்திருக்கிறது அதை உணராமல் எனக்கு எதுவும் வாழ்வில் கிடைக்கவில்லை என்றுப் பலர் வாழ்வை முடித்துக் கொள்கிறார்கள். சாகும் நொடி வரை உன்னோட ஆட்சிக் காலம் தான் . வலிமையுடன் துணிந்து நில். இந்தப் பிரபஞ்சம் உனக்குத் துணை நிற்கும்.

218. உன் நினைவுகள் என்னும் அலை என்னை இழுத்ததால் வாழ்க்கை என்னும் கரையை அடைய முடியாமல் தவிக்கிறேன்.

219. என்னத் தான் நாம் பலப் பேருடன் பேசி கலந்துரையாடல் செய்து நேரத்தைச் செலவிட்டாலும் நம்முடன் நாம் நேரத்தைச் செலவிடுவதுப் போல் ஆகாது. நம்முடன் நாம் நேரத்தைச் செலவிடும் போதுத் தான் நம் திறமையை அதிகம் கண்டறிய முடிகிறது.

220. பிறரின் பாலியல் துன்புறுத்தலால் உன் உடல் தான் சிதைக்கப்படுகிறதேத் தவிர உன் கனவுகள் அல்ல. அவர்களைச் செருப்பால் அடித்துத் தண்டிப்பதை விட எப்படி வாழ வேண்டும் என்பதற்கு உதாரணமாய் நீ வாழ்ந்து காட்டி தண்டனைக் கொடு.

221. தவறாக ஒரு உறவுக்குள் சிக்கி வெளியேறியப் பின் அவள் நன்றாக வாழ வேண்டும் என்று நினைத்தாலும் அவள் குணம் சரி இல்லாதவள் என்று விலக்கி வைத்து அவளது எதிர்காலத்தைச் சிதைக்கிறது இந்தச் சமூகம்.

222. தவறுச் செய்கிறேன் எனத் தெரிந்தும் சரிச் செய்ய முடியாமல் தவிக்கிறேன் . பிறர் நான் தெரிந்தேத் தவறுச் செய்கிறேன் என நினைத்து வெறுக்கிறார்கள்.

223. வேலையைப் பெறுவதற்கு மட்டும் தைரியம் வேண்டும் என்பது அல்ல . வேலையை விடுவதற்கும் தைரியம் வேண்டும் . வாழ்கையில் அடுத்த நிலையை உன்னால் சமாளிக்க முடியும் என்ற துணிச்சல் உன்னிடம் இருந்தால் வெற்றி உனக்குக் கிடைக்கும்.

224. பெற்றோர்கள் தங்களது மகளுக்கு வயது ஆகிறது, தங்களுக்கு வயது ஆகிறது, சொந்தக்காரர்கள் கேட்கிறார்கள், வசதியான இடமா என்றுப் பார்த்துத் திருமணம் செய்து வைக்கிறார்கள். ஆனால் தங்களின் மகளுக்குச் சரியான வாழ்க்கையா என்று பார்க்கத் தவறிவிடுகிறார்கள்.

225. உணர்வுகள் புரிவதற்குள் ஒருவர் மீதுக் காதல் வந்து விடுகிறது . தெரியும்போது கைக்குக் கிடைக்காமல் தூரம் சென்றுவிடுகிறது.

226. பொய் சொல்வதுத் தவறாக இருந்தாலும் பொய் சொன்னாலோ அல்லது உண்மையை மறைத்தால் தான் உன்னால் முன்னேற முடியும் என்றால் அதுத் தவறாகக் கருதப்படாது.

227. எனக்கு வராததை என்னைச் செய்ய வைக்க முயற்சித்ததால் நான் தோற்றேன். ஆனால் என்னால் முடியாது என்றுத் தெரிந்தும் முயற்சித்து என் முயற்சியில் பின் வாங்காமல் இருந்தேன்.

228. பிடித்த வாழ்க்கையை வாழ்வதற்காகப் பிடிக்காத விஷயங்களைப் பிடித்ததுப் போலச் செய்து நாட்களைக் கடக்க வைக்கிறது.

229. குழந்தைப் பருவத்தில் சிரிப்பதற்கு ஆயிரம் காரணங்களும் , விஷயங்களும் இருந்தது. வளர்ந்தப் பிறகுச் சிரிப்பதற்குக் காரணத்தைத் தேட வேண்டியிருக்கிறது.

230. உடல் நலம் சரியில்லை என்று என்னால் படுத்து உறங்கக் கூட முடியவில்லை . சம்பளம் கழிந்துப் போகிறது என்று என் பெற்றோர் கவலைப்படுகிறார்கள் . பணத்திற்குக் கொடுக்கும் முக்கியத்துவமும் , மதிப்பும் எனக்கு என் பெற்றோர் கொடுக்கவில்லை என்று நினைக்கும் போதுத் தான் என் மனம் மிகவும் வலிக்கிறது.

231. கடலின் ஆளத்தையும் , கடல் அலை எப்படி அடிக்கும் என்று யாருக்கும் தெரியாது, கணிக்கவும் முடியாது. அதுப் போல யாராலும் என் மனதையும் புரிந்துக் கொள்ள முடியாது. என்னுடன் பழகுபவருக்கு மட்டுமே தெரியும் நான் எப்படிப்பட்டவள் என்று.

232. கவிதை எழுதுவதுப் பிறர் அதனைப் படித்து ரசிக்க மட்டுமல்ல . பிறரிடம் கூற முடியாத விஷயங்களை வார்த்தைகளால் வெளிப்படுத்தவும் , பிறரிடம் இருந்து தனக்கு கிடைக்காத ஆறுதலும் , நம்பிக்கையும், வலிமையும் வார்த்தைகளால் கொட்டி எழுதி பெறுவதற்காகத் தான்.

233. நம்மைச் சுற்றி எத்தனைப் பேர் இருந்தாலும் நமக்குப் பிடித்தவர்கள் நம்முடன் இருப்பதுப் போல் வராது.

234. வாழ்க்கையில் உனக்குச் சோதனை வந்ததும் மனம் உடைந்து அழாமல் மாறாகச் சிரித்து அடுத்தவர் முன் துணிந்து நில் . பிறருக்கு ஆறுதல் சொல் , உறுதுணையாக இரு. அதுவே உன் வாழ்க்கை நிலையை மாற்றி அமைக்க உதவும்.

235. பணத்திற்காகவும், காமத்திற்காகவும் திருமணம் செய்யாமல் தன்னை கவனித்துக் கொள்ளவும் , தன் இன்பத் துன்பங்களை மனம் விட்டு பரிமாறிக் கொள்ளத் துணை வேண்டும் என்றும் , குழந்தை இருந்தால் தான் நிறைவான வாழ்க்கை என்று எண்ணாமல் அவள் மனதிலும் , உடலிலும் எந்தக் குறை இருந்தாலும் என்றுக் கொண்டு குழந்தைப் போல் பார்த்துக் கொள்ளும் எண்ணம் ஆண்களுக்கு எழாத வரை திருமண வாழ்க்கையும், திருமண உறவுகளும் சரியாக இருக்காது.

236. எனக்கு வீட்டு எல்லைச் சுவருக்குள் பூத்துக் குலுங்கும் பூக்களாக வாழ ஆசை இல்லை. சுற்றுலாப் பயணிகள் பார்த்து ரசித்துச் செல்லும் எல்லையற்ற மலர் கண்காட்சிகளில் உள்ள பூக்களைப் போல் வாழ வேண்டும் . அதனைப் போல் என் திறமைக்கும், முயற்சிக்கும் எல்லையில்லாமல் என் புகழ் உலகெங்கும் பார்த்து வியக்க ஆசை.

237. மனிதர்கள் உன்னை நிராகரித்தாலும் , உன்னைத் தவறாக நடத்தினாலும் வாழ்க்கையை வெறுத்து விடாதே . இறைவன் எப்போதும் உன்னை நிராகரிப்பதில்லை. உன்னால் மட்டும் தான் இந்த வாழ்க்கையைச் சிறப்பாக வாழ முடியும். அதனால் தான் இந்த வாழ்க்கை இன்று உன்னிடம் இருக்கிறது. உன்னிடம் உள்ள குறைகளை மட்டும் எண்ணாமல் உன்னிடம் உள்ள நிறைகளை நினைத்து அதற்கேற்ப முன்னேறி கொண்டேச் செல்.

238. சிலச் சமயத்தில் பேருந்தின் பயணத்தின் போதுத் தவறானப் பேருந்தில் பயணம் செய்ததும், தவறான நிறுத்தத்தில் இறங்குவதோச் செய்திருப்போம். பின் சரியானப் பாதையில் செல்வோம் . அதுப் போலத் தான் வாழ்க்கை பயணமும் தவறான பாதையில் சென்றால் தான் சரியான இலக்குக்கான பாதையை அறிந்து உன்னால் அடைய முடியும்.

239. வாய்ப்பு என்பதுத் திறக்க முடியாதக் கதவுத் திறப்பதுப் போல. அந்த வாய்ப்பை நீ சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் . ஏனென்றால் எப்போதும் அந்தக் கதவுத் திறக்காது.

240. நீயா என்று ஏளனமாகப் பார்த்தவர்கள் முன் நீயா என்று ஆச்சரியத்துடன் பார்க்க வெற்றி என்னும் உருவமாய் உருவெடுத்து நில். வெற்றி என்றால் நீதான் என்றுச் சொல்லும் வரை வீழாமல் போராடிக் கொண்டே இரு.

241. எல்லாருக்கும் எல்லாமேச் சரியாகச் சரியான நேரத்தில் கிடைக்காது . அதற்காகக் கிடைக்காது என்று அர்த்தம் அல்ல. நீ தேடும் பொருளைப் பெறுவதற்கு நீ சரியான ஆளாக இப்போது இல்லை. அதை அடையச் சரியான ஆளாக மாற உன் திறமையை வளர்த்துக் கொள். உன்னை நீ மாற்றிக் கொள். பின்னர் நீ விரும்பிய அனைத்தும் உன் வசமாகும்.

242. எல்லாராலும் தோல்வியை ஏற்றுக் கொள்ள முடியாது . ஒருச் சிலருக்கு மட்டும் தான் தோல்வியை ஏற்றுக்கொள்ளும் தைரியம் இருக்கும் . தோல்விக் கிடைக்கும் என்றுத் தெரிந்தும் முயற்சித்துத் தோற்பதுக் கூட ஒரு வகையான வெற்றி தான் . அந்தத் தோல்வியை எதிர்கொள்பவர் தைரியசாலி தான்.

243. எந்த ஒருப் பிரச்சினையையும் நீ முட்டி மோதும் வரைத் தான் கடினமானதாகவும், அதிலிருந்து மீண்டு வர முடியாததுப் போல் தோன்றும் . முட்டி

மோதி மீண்டு வரப் பழகிக் கொண்டால் உன்னை விடப் பலசாலி யாருமில்லை இந்த உலகில்.

244. உனக்குப் பிடித்ததைப் பிடித்த வகையில் செய்யும் போதுத் தான் அதில் நீ முன்னேற்றம் அடைவாய். உன்னால் அதில் அறிவுமிக்கவராகத் மாற முடியும்.

245. இப்போது ஒருப் பெண் முன்னேற வேண்டும் என்று ஆண்கள் நினைக்க தொடங்கி விட்டனர். ஆனால் ஒருப் பெண் முன்னேறுவதை பெண்கள் தான் அவளை விமர்சித்து அவளது நம்பிக்கையை உடைத்து வீழ்த்துகின்றனர் அவளை முன்னேற விடாமல்.

246. வருடங்கள், நாட்கள், நிமிடங்கள், மனிதனின் எண்ணங்கள் எப்போதும் மாறிக் கொண்டேத் தான் இருக்கிறது. நீயும் உன் வாழ்க்கையும் மாறும். இந்த நிலையை நீ அடைவதற்கு முன் இருந்த வாழ்க்கை நிலையை யோசித்துப் பார் . எதுவும் கடினம் இல்லை என்று நீ அறிவாய்.

247. நம் வாழ்க்கையை நம் விருப்பத்திற்கே வாழ வேண்டும் . அப்படி வாழ முடியவில்லை என்றால் நீ வாழ்வதுத் தவறு.

248. ஒருவரிடம் பணம் கடனாக வாங்கினால் திருப்பிச் செலுத்தி விட முடியும் . ஆனால் நம் துன்பக் காலத்தில் ஒருவரிடமிருந்து நமக்குக் கிடைக்கும் ஆறுதலான வார்த்தைகளுக்கும், உடல் நலம் சரியில்லாதப் போது ஒருவரிடமிருந்து நமக்குக் கிடைக்கும் அரவணைப்புக்கும் நாம் எதைச் செய்தாலும் அதனை ஈடுச் செய்ய முடியாது.

249. வாழ்க்கை என்னவென்றுப் புரியாதப் போது நமக்கு அதிகப் பிரச்சனைகள் வருகிறது. அப்போது நாம் சாக வேண்டும் என்று நினைக்கின்றோம் . நாம் இறக்கும் கடைசி நொடியில் வாழ்க்கை என்னவென்றுப் புரிகிறது . ஆனால் வாழ முடியாமல் போகிறது. எனவே நீ சாக முயலாதே. வாழக் கற்றுக்கொள்.

250. ஒருவரை ஒருவர் பார்க்காமல் கூடக் காதல் செய்யலாம் . ஆனால் ஒருவரைப் பற்றி ஒருவர் தெரியாமல் காதல் செய்யக் கூடாது.